தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

01.02.2024

### தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் தொடர்பு:

# கலெக்டர், ஐ.ஜி. உள்பட 17 அதிகாரிகள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும்

## ஐகோர்ட்டு நோட்டீஸ்

சென்னை, பிப்.1–

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையம் தாமாக முன்வந்து வழக்காக எடுத்து விசாரணை நடத்தியது. பின்னர் இந்த வழக்கை தேசிய மனித உரிமை ஆணையமே முடித்து வைத்தது. இதை எதிர்த்து மனித உரிமை ஆர்வலரும், வக்கீலுமான ஹென்றி திபேன் என்பவர், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, இந்த வழக்கில் துப்பாக்கி சூட்டுக்கு காரணமான சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் எதிர்மனுதாரர்களாக இணைத்து மனு தாக்கல் செய்ய மனுதாரருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டு இருந்தனர்.

அதன்படி, துப்பாக்கி சூடு தொடர்பாக விசாரணை நடத்திய நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையில் சுட்டிக்காட்டியபடி துப்பாக்கி சூடு சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் தென்மண்டல ஐ.ஜி., டி.ஐ.ஜி., தூத்துக்குடி மாவட்ட முன்னாள் கலெக்டர் உள்ளிட்ட 17 பேரை எதிர்மனுதாரர்களாக சேர்த்து ஹென்றி திபேன் கூடுதல் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், என்.செந்தில் குமார் ஆகியோர் கொண்ட டிவிசன் பெஞ்சில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன் ஆஜராகி, 17 அதிகாரிகளை இந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை" என்று வாதிட்டார்.

இதை நீதிபதிகள் ஏற்கவில்லை. எங்களது உத்தரவின்படிதான் 17 அதிகாரிகளையும் மனுதாரர் எதிர்மனுதாரர்களாக சேர்த்துள்ளார் என்று விளக்கம் அளித்தனர்.

மனுதாரர் ஹென்றி திபேன், "இந்த வழக்கில் அரசு தரப்பில் ஆஜராகும் வக்கீல்கள், ஏற்கனவே ஸ்டெர்லைட் ஆலை சார்பில் ஆஜராகாதவர்களாக இருந்தால் நல்லதாக இருக்கும்" என்று அட்வகேட் ஜெனரலை மறைமுகமாக குறிப்பிட்டு வாதிட்டார்.

இதையடுத்து நீதிபதிகள், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 17 அதிகாரிகளும் பதில் அளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடுகிறோம். விசாரணையை வருகிற 21-ந்தேதிக்கு தள்ளி வைக்கிறோம் என்று உத்தரவிட்டனர்.